
கம்பன்
அலைகள்
"அலைகள் எழுப்பும் தமிழ் இலக்கியக் குரல்!"

உள்ளடக்கங்கள்

ஒருவரி கவிதைகள்

- இயற்கை கவிதை - புலரி
- காதல் கவிதை - தேடல்
- நம்பிக்கை கவிதை - துளிர்
- அம்மா கவிதை - மடி
- நகைச்சுவை கவிதை - சம்பளம்

இருவரி கவிதைகள்

- வாழ்க்கை கவிதை - விதி
- தாய்மை கவிதை - தாலாட்டு
- நம்பிக்கை கவிதை - சிகரம்
- காதல் கவிதை - தவிப்பு
- இயற்கை கவிதை - ஆழி

ஹைக்கூ கவிதைகள்

- இயற்கை கவிதை - மழை
- உணர்வு கவிதை - மௌனம்
- தனிமை கவிதை - ஏக்கம்
- பெண்மை கவிதை - சுடர்
- சமூக கவிதை - வறுமை

உள்ளடக்கங்கள்

நால்வரி-பா கவிதைகள்

- கல்வி கவிதை - தேடல்
- இலக்கிய கவிதை - வண்ணம்
- உளவியல் கவிதை - அமைதி
- உறவுகள் கவிதை - பிணைப்பு
- விவசாய கவிதை - வித்து

சிறந்த கவிதைகள்

கட்டுரைகள்

- இன்று உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ள வேண்டிய 5 உண்மைகள்
- இணையமும் இன்றைய மனித வாழ்வும்

சிறுகதைகள்

- தாத்தாவும் பேரனும் - ஒரு காலப் பாலம்
- கடைசி சாட்சி

ஒருவரி கவிதைகள்

புலரி

இரவின் கண்ணீரைத் துடைத்து, புன்னகையோடு ஒளிர்கிறது அதிகாலை!

கோ கே. ஏழுமலை - கள்ளக்குறிச்சி

தேடல்

முடிவான பயணத்தில் முற்றுப்பெறாத சுகமான தொடர்கதை

சி.கனகலெட்சுமி - கோயம்புத்தூர்

துளிர்

மண்ணில் மக்காமல் புவியை புரட்சி செய்ய மண்ணை கிழித்து துளிராய் வளர்கிறது!

பெ. சுஜித் - கள்ளக்குறிச்சி

மடி

இறைவன் படைத்த பிள்ளை பெறும் சாதனம்.

த.பால் தங்கம் - சென்னை

சம்பளம்

சம்பளம் வந்ததும் சந்தோஷம் மறுநாள் கடனுக்கு

மாணிக்கவாசகம் நாகேசுவரன் - வடலூர்

இரு வரி கவிதைகள்

விதி

சோதனைகள் தந்து சோதிக்கும் விதி
சாதனைகள் படைத்து மாற்றுவோம் கதி

கோ கே. ஏழுமலை - கள்ளக்குறிச்சி

தாலாட்டு

உறங்காத விழிகளிலும் உயிரேந்தும் அன்புத் தாலாட்டு!
உலகமே கைவிட்டாலும் மடியேந்தும் தாயின் சீராட்டு!

சி. கிருஷ்ணவேணி - தருமபுரி

சிகரம்

துணிந்து நின்றால் அது உனது நகரம்,
தடைகளைத் தகர்த்து தொடுவோம் சிகரம்!

தேவி க - சென்னை

தவிப்பு

காதலிக்கு தாய் முன்னால் வருவது
திருமணத்திற்கு பின்பு ஆனந்தம் தருவது

த.பால் தங்கம் - சென்னை

ஆழி

இறைவனின் விழி
இயற்கையில் அமைந்த ஆழி...

ஆறுகள் அடங்கும் இடம்...
ஆழி இருக்கும் தடம்...

சு.க.சீ லிட்டில் பாரதியார் - கள்ளக்குறிச்சி

ஹைக்கூ கவிதைகள்

மண்ணின் மீதுள்ள
தன் காதலை மெய்ப்பிக்க
போராடும் நீர்த்துளி – மழை

கோகிலா செல்லப்பன் - நாமக்கல்

வார்த்தைகள் தோற்றுப்போகும் இடத்தில்,
இதயங்கள் பேசிக்கொள்ளும்
அழகிய மொழி! – மௌனம்

கோ கே. ஏழுமலை - கள்ளக்குறிச்சி

எதிர்பார்த்த ஒன்று கிடைக்கும் என்று
என்னுள் ஆசை விதைத்து விட்டேன்
ஏமாற்றமும் ஏக்கமும் மட்டுமே மிஞ்சியது என்னுள் – ஏக்கம்

பெ. சுஜித் - கள்ளக்குறிச்சி

அடக்க நினைத்த
அலைகளைக் கிழித்தெழும்
பெண்மையின் ஆழி! – சுடர்

மாணிக்கவாசகம் நாகேசுவரன் - வடலூர்

இருப்பவன் முகத்தில் குடியிருக்கும்
இறுமாப்பு இல்லாதவன் தன்மானத்தை
எதிர்க்க முடியாமல் அழியும் – வறுமை

சுந்தர் சுவாமிநாதன் - திருநெல்வேலி

நால்வரி பா கவிதைகள்

பள்ளிக்கூடம் போகும் வழியே
உள்ளே ஒளிரும் அறிவுச் சுடரே
நன்மை தரும் நல்ல நூலே
உண்மை காட்டும் கல்வித் தேடலே!

கோ கே. ஏழுமலை - கள்ளக்குறிச்சி

வண்ணத் தமிழின் வளமான காவியம்,
எண்ணத்தில் என்றும் ஏந்திடும் ஓவியம்!
பண்பாட்டின் வேராய் பதிந்திட்ட சொற்களே,
கண்போல காப்போம் கவினுறு மொழியையே!

ரா .ஸ்ரீநிதி - சிவகங்கை

உண்மை உரையில் உதாசீனம் உறையாது
உருவான அமைதியில் சீந்தனைச் சீதறாது
வளர்ச்சி வானத்தைத் தொட்டுப் பார்க்கும்
பகைப்பவர் இதயத்தில் அன்பைச் சுரக்கும்

சுந்தர் சுவாமிநாதன் - திருநெல்வேலி

நால்வரி பா கவிதைகள்

பிணைப்பு என்பது பிறப்பில் இல்லை
இணைப்பு என்பது இரத்தம் மட்டும் இல்லை
கணைபோல் வந்து காத்து நிற்பதே
மணைபோல் வாழ்வைத் தாங்கும் உறவே

கார்த்திக் - சென்னை

வித்தாய் விதைத்தேன் மண்ணில்!
புதைந்தாய், வீறு கொண்டு பயிராய் எழுந்தாய்,
அனைவரும் புசிக்கப் பசியாற்றினாய்,
பாரினில் உன்னை விடப் புனிதமானவர் யாருமிலரே!

தேவி க - சென்னை

சிறந்த கவிதைகள்

காலை இளவெயில் கண்ணில் படுமுன்னே
கவலைகள் மறந்து கவிபாட வந்தேனே!

சோலை மலர்களின் வாசனை நுகர்ந்தபடி
சொல்லின் சுவையில் நெஞ்சம் நனைந்தேனே!

பூமிப் பாயில் இயற்கை விரித்த
பச்சை ஆடை கண்டு வியந்தேனே!

ஆல மரத்து விழுதுகள் போல
அன்பின் உறவில் என்றும் தளைப்பேனே!

கால நதியில் ஓரும் ஓடம்
கற்றுத் தந்த பாடம் கோடியே!

மாலை நிலவின் குளிர்ச்சி போல
மனதில் அமைதி என்றும் வாழ்கவே!

வாழும் நாளில் அறமே செய்து

வானம் தொடுவோம் நாமே உயர்ந்து!
வையத்து மாந்தர் வாழ்த்தவே வாழ்க!

– கோ கே. ஏழுமலை–கள்ளக்குறிச்சி

சிறந்த கவிதைகள்

இனிய சொற்களால் இதயங்களை வெல்வோம்!
கனிவான பேச்சு உறவை வளர்க்கும்,
கள்ளமில்லா அன்பு மனதை மகிழ்விக்கும்!

இனிய சொற்களைப் பேசிப் பழகுவோம்,
இன்பமான உறவுகளைப் போற்றிக் காப்போம்!
கோபம் வந்தாலும் பொறுமை காப்போம்,

குறை கூறுவதைச் சற்றே குறைப்போம்!
பிறர் மனம் நோகாமல் நடந்துகொண்டால்,
பெருமை நமக்கு

– S. அசோக் குமார் – ராமநாதபுரம்

மழையைப் போற்றுவோம்!
மழைத்துளி ஒவ்வொன்றும் இயற்கையின் பரிசு,
அதைச் சேமிப்பதே நம் வாழ்வின் சிறப்பு!

மழைநீரைச் சேமிப்போம்,
மண்ணின் வளத்தைக் காப்போம்!

– S. அசோக் குமார் – ராமநாதபுரம்

சிறந்த கவிதைகள்

வீட்டின் முற்றத்தில் காற்றும் வீசும்
விடியும் வேளையில் கதிரும் பேசும்

வெயிலின் வெப்பம் முற்றத்தை நாடும்
மண்ணின் வாசனை நாசியில் ஏறும்

துளசி மாடத்தில் விளக்கும் எரியும்
பறவைக் கூட்டம் முற்றத்தில் வாழும்

தேன்போல் இனிக்கும் குழந்தையின் பேச்சு
வளரும் பிள்ளைக்கு பாடமும் ஆச்சு

நிலவின் வெளிச்சம் முற்றத்தில் வீசும்
காற்றும் மழையும் முற்றத்தைக் தாக்கும்

பறக்கும் பறவைகள் கூடியே வாழும்
துள்ளும் கன்றுகள் குதித்துமே ஆடும்

உறங்கும் நேரத்தில் வெண்ணிலா வெளிச்சம்
திண்ணையின் ஓரத்தில் வண்ணக் கோலம்

உணவு சமைக்க முற்றமும் உதவும்
நெஞ்சிலே முட்டும் முற்றத்தின் பாசம்

அன்னையின் மடியில் ஆயிரம் கனவுகள்
பாட்டியும் சொல்வாள் முற்றத்தில் கதைகள்

விழாக் காலத்தில் முற்றங்கள் ஜொலிக்கும்
மாலை வெளிச்சத்தில் அமைதியைத் தந்திடும்

–முகம்மது அஜிபுல்லா –தஞ்சாவூர்

சிறந்த கவிதைகள்

வண்ண பூக்கள் தொடுப்பது கதம்பம்!
வகைக்கு ஒன்றாய் சேர்ப்பதில் நிரம்பும்!

பலவகை பூக்கள் சேர்த்திடல் அழகு!
பார்த்திட நமக்கு பெருகிடும் மெருகு!

மாலை தொடுப்பது கலையின் அழகு!
புனிதம் பெறுவது பக்தரின் மனது!

மதுரை மல்லி மகத்துவம் பெறும்!
தஞ்சை மாலை தரணியின் சோலை!

கதம்பம் என்பது வண்ணக் கலவை!
காண்பதில் நமக்கு மிஞ்சும் நிலவை!

கண்ணுக்குத் தருமேஅழகிய தோற்றம்!
காலம் அறிந்து செடிகளில் பூக்கும்!

பண்பாடு காக்கும் பாரம்பரியம்!
பாரினில் அதுவே நிலைத்து நிற்கும்!

மணமாலை இல்லாத் திருமணமில்லை!
மாலை சூடாத பெண்களுமில்லை!

அனைத்தும் சேர்ந்து நறுமணம் வீசும்!
அதுதான் இந்தியத் தன்மையைப் பேசும்!

கதம்பம் எளிதில் வாடுவதில்லை!

வேற்றுமையில் ஒற்றுமை என்பதே
கதம்பம்!

இயற்கையின் அழகும் பூவின் மணமும் !
இணைந்து அழகு சேர்ப்பதே சிறப்பு!

காலங்கள் கடந்தும் வாசம் வீசும்!
கதம்பம் தேடாத மானிடரில்லை !

–முகம்மது அஜிபுல்லா –தஞ்சாவூர்

கட்டுரைகள்

கட்டுரை - 1

இன்று உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ள வேண்டிய 5 உண்மைகள்

சுயமரியாதையை உயர்த்தும் வரிகள்

முன்னுரை:

- நாம் தினமும் எதிர்கொள்வது வாழ்க்கையின் வெற்றிகள், தோல்விகள், உறவுகள், மற்றும் மன அழுத்தங்களாகும்.
- இவற்றை சமாளிப்பதில் சுயமரியாதை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மனஅழுத்தம் குறைந்து, மனநலத்தை மேம்படுத்த, சுயமரியாதையை வளர்க்க, சில அறிவியல் பூர்வமான உண்மைகள் நமக்கு வழிகாட்டும்.
- இங்கே, இன்று உங்களுக்கே சொல்வதற்குரிய 5 உண்மைகள் மற்றும் அவற்றின் அறிவியல் விளக்கம்.

I. நீங்கள் உங்கள் உணர்வுகளுக்கே உரிமையாளர்:

- நாம் எப்போது மன அழுத்தத்தில் இருப்போமோ, பெரும்பாலும் மற்றவர்கள், சூழல்கள் அல்லது நிகழ்வுகளை குற்றம்சாட்டுகிறோம்.
- ஆனால் மனநல ஆராய்ச்சிகள் தெரிவிப்பதாவது, மனஅமைதியையும் உணர்வு கட்டுப்பாட்டையும் அடைய நீங்கள் உங்கள் உணர்வுகளை நிர்வகிக்க வேண்டும் என்பதாகும்.
- அறிவியல் ஆதாரம்: கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சி கூறுகிறது, எமோஷனல் ரெகுலேஷன் பயிற்சிகள் மன அழுத்தத்தை 30% குறைக்க உதவுகின்றன.
- சுயமரியாதை உயர்வு: உங்கள் உணர்வுகளை அடையாளம் கண்டு, அவற்றை நிர்வகிப்பது, உங்களை நம்பும் மனத்தை உருவாக்குகிறது.

கட்டுரைகள்

2. நீங்கள் ஏற்கனவே மதிப்புமிக்கவர்

- பலரின் மனதில் 'நான் போதவில்லை' என்ற எண்ணங்கள் இருக்கும்.
- ஆனால், உளவியல் ஆய்வுகள் உணர்த்தும் தாயாரிப்பு: உங்களுக்கு தனிப்பட்ட திறமைகள், சாதனைகள், மற்றும் வலிமைகள் உள்ளன.
- அறிவியல் ஆதாரம்: பல சோசியல் சைக்காலஜி ஆய்வுகள் கூறுகின்றன, நம்மை நாம் மதிப்பது நமது மனநலத்திற்கும் செயல்திறனுக்கும் நேரடியாக தாக்கம் அளிக்கிறது.
- சுயமரியாதை உயர்வு: தினமும் ஒரு சிறிய சாதனையை நினைவுசெய்து, அதை கொண்டாடுங்கள்; இது உங்களின் உள்ளுணர்வை வலுப்படுத்தும்.

3. தோல்விகள் பயிற்சியாகும்

- மிகவும் பொதுவாக, தோல்விகள் நமக்கு துன்பத்தை தரும்.
- ஆனால் அறிவியல் கூறுவது, தோல்விகள் அனுபவமாகும், நம்மை மேம்படுத்தும் ஒரு வாய்ப்பு.
- அறிவியல் ஆதாரம்: ஹார்வர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சி கூறுகிறது, தோல்வியைக் கொண்ட மனிதர்கள் எதிர்காலத்தில் மேம்பட்ட தீர்வு சிந்தனையையும் தீர்மானத்தையும் வளர்க்கும்.
- சுயமரியாதை உயர்வு: தோல்விகளை தோற்கடித்து நீங்கள் முன்னேறுவது, உங்கள் தனிப்பட்ட மதிப்பை வலுப்படுத்தும்.

4. நீங்கள் மற்றவரோடு ஒப்பிட வேண்டாம்

- மற்றவருடன் ஒப்பிட்டு வாழ்வது மன அழுத்தத்தையும் குறைந்த மனநலத்தையும் உருவாக்கும்.
- ஒவ்வொருவரும் தனித்துவமான பயணம் கொண்டவர்கள்.
- அறிவியல் ஆதாரம்: ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக ஆய்வுகள் கூறுகின்றன, சமூக ஒப்பீடு மன அழுத்தத்தை 25% அதிகரிக்கும்.

கட்டுரைகள்

- சுயமரியாதை உயர்வு: உங்களின் திறமைகள், முன்னேற்றங்கள், வளர்ச்சி உங்கள் சொந்த அங்கீகாரத்தைப் பொருந்தும்; இதன் மூலம் உண்மையான சுயமரியாதை உருவாகும்.

5. நீங்கள் மாற்றக்கூடியது

- மனிதன் எப்போதும் மேம்படக்கூடியவர். சிறிய பழக்கங்களும், சிந்தனை முறை மாற்றங்களும், வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும்.
- அறிவியல் ஆதாரம்: யேல் பல்கலைக்கழக மனநல ஆராய்ச்சி கூறுகிறது, தினசரி 5 நிமிடங்கள் மனப்பயிற்சி செய்யும் பழக்கம் மனநலத்தையும், மனவளர்ச்சியையும் 20% மேம்படுத்துகிறது.
- சுயமரியாதை உயர்வு: நீங்கள் மாற்றங்களை ஏற்கும் போது, உங்கள் திறமைகள் வளர்ச்சி அடைந்து, உங்களுக்கு உயர்ந்த மதிப்பு தரும்.

முடிவு

- இந்த 5 உண்மைகள் – உங்கள் உணர்வுகளுக்கே உரிமையாளர், நீங்கள் மதிப்புமிக்கவர், தோல்விகள் பயிற்சியாகும், மற்றவரோடு ஒப்பிட வேண்டாம், நீங்கள் மாற்றக்கூடியவர் – நமது சுயமரியாதையை வளர்க்க ஒரு வழிகாட்டி.
- தினமும் இவைகளை மனதில் வைத்தால், மனஅழுத்தம் குறைந்து, நம்பிக்கை, ஆற்றல், மற்றும் மனநலம் அதிகரிக்கும்.
- உங்கள் உள்ளே ஒரு வலிமையான, மதிப்புமிக்க, வளர்ந்த மனம் இருப்பதாக உணர்ந்து, உங்கள் வாழ்க்கையை சிறப்பாக நடத்துங்கள்.

– கோ சங்கீதா

கட்டுரைகள்

கட்டுரை - 2

இணையமும் இன்றைய மனித வாழ்வும்

முன்னுரை:

- இன்றைய நவீன உலகில் கணினியும் இணையமும் மனித வாழ்வின் பிரிக்க முடியாத அங்கங்களாக மாறிவிட்டன.
- காலையில் கண் விழிப்பது முதல் இரவில் உறங்கச் செல்வது வரை நமது அன்றாடச் செயல்பாடுகள் பலவும் ஏதோ ஒரு வகையில் இணையத்தோடு பிணைக்கப்பட்டுள்ளன.
- கல்வி, மருத்துவம், வணிகம், பொழுதுபோக்கு, தொடர்புத் துறை என அனைத்துத் துறைகளிலும் இணையத்தின் ஆதிக்கம் பரந்து விரிந்து கிடக்கிறது.
- இந்தத் தொழில்நுட்பப் புரட்சி மனித குலத்திற்குப் பேரொளியைத் தந்துள்ளதா அல்லது பேரிருளை நோக்கி இட்டுச் செல்கிறதா என்பதைச் சிந்திப்பது அவசியமாகிறது.

இணையத்தின் நன்மைகள்

- இணையத்தின் முதன்மையான நன்மை உலகளாவிய தகவல் தொடர்பாகும். உலகின் எந்தவொரு மூலையில் இருக்கும் நபருடனும் ஒரு சில நொடிகளில் நாம் தொடர்பு கொள்ள முடிகிறது.
- காணொளி அழைப்புகள் மூலம் தூரங்கள் சுருங்கிவிட்டன.
- மேலும், கல்வித் துறையில் இணையம் ஒரு மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.
- உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களின் பாடங்களை வீட்டிலிருந்தபடியே இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ கற்கும் வாய்ப்பை இணையம் வழங்குகிறது.

கட்டுரைகள்

- நூலகங்களுக்குச் செல்லாமலேயே கோடிக்கணக்கான புத்தகங்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் இணைய வழித் தேடலின் மூலம் நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது.
- வணிகத் துறையிலும் இணையத்தின் பங்கு மகத்தானது. 'ஆன்லைன் ஷாப்பிங்' மற்றும் 'டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை' முறைகள் மனிதர்களின் நேரத்தையும் உழைப்பையும் பெருமளவு மிச்சப்படுத்தியுள்ளன.
- வங்கிகளுக்குச் செல்லாமல் மொபைல் ஆப்ஸ்கள் மூலம் பணத்தை நொடியில் அனுப்ப முடிகிறது. சிறு வணிகர்கள் கூட இணையத்தின் மூலம் உலகளாவிய வாடிக்கையாளர்களைப் பெற முடிகிறது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பிற்கும் பெருமளவில் உதவுகிறது.

இணையத்தின் தீமைகள்

- இருப்பினும், நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதைப் போல இணையத்திலும் பல தீமைகள் நிறைந்துள்ளன.
- இதில் முதன்மையானது இணையப் பாதுகாப்பு மற்றும் தனிநபர் தரவுத் திருட்டு ஆகும். ஹேக்கர்கள் மூலம் மக்களின் வங்கி விபரங்களும், தனிப்பட்ட தகவல்களும் திருடப்படும் அபாயம் எப்போதும் உள்ளது.
- மேலும், சமூக ஊடகங்களின் அதிகப்படியான பயன்பாடு இளைஞர்கள் மற்றும் குழந்தைகளிடையே பெரும் மனநலப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.
- நேருக்கு நேர் பேசிப் பழகும் மனிதப் பண்பு குறைந்து, திரைக்குப் பின்னால் வாழும் தனிமைச் சமூகம் உருவாகி வருகிறது.
- போலிச் செய்திகளின் பரவலும் இணையத்தின் மற்றொரு பெரிய அச்சுறுத்தலாகும். உண்மைத்தன்மை அறியாமல் பரப்பப்படும் செய்திகள் சமுதாயத்தில் அமைதியின்மையையும் கலவரங்களையும் தூண்டுகின்றன.

கட்டுரைகள்

- இணைய விளையாட்டுகளுக்கு அடிமையாவதால் மாணவர்களின் கல்வித்திறனும், உடல் ஆரோக்கியமும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன.
- உடல் உழைப்புக் குறைந்து, நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பதால் பல்வேறு நோய்களுக்கு மக்கள் ஆளாகிறார்கள்.

முடிவுரை

- எனவே, இணையம் என்பது ஒரு கூர்மையான கத்தி போன்றது.
- அதைப் பழம் நறுக்குவதற்கும் பயன்படுத்தலாம், ஒருவரைக் காயப்படுத்துவதற்கும் பயன்படுத்தலாம்.
- அது பயன்படுத்துபவரின் கைகளில்தான் உள்ளது.
- தொழில்நுட்பத்தை நம் தேவைக்கு மட்டும் பயன்படுத்தி, அதன் அடிமையாக மாறாமல் இருப்பதே புத்திசாலித்தனம்.
- இணைய வழித் தீமைகளில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.
- நன்மைகளை மட்டும் எடுத்துக்கொண்டு, தீமைகளைப் புறந்தள்ளி, இணையத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தினால் மனித சமுதாயம் மேலும் பல சிகரங்களை எட்டும் என்பதில் ஐயமில்லை.

–கோ கே. ஏழுமலை

சிறுகதைகள்

சிறுகதை-1

தாத்தாவும் பேரனும் – ஒரு காலப் பாலம்

காலை நேரத்து இளவெயில் சென்னை மாநகரத்தின் பரபரப்பான சாலைகளில் மெல்லப் பரவத் தொடங்கியிருந்தது. 'காபி வித் காம்போ' என்ற சிறிய உணவகத்தின் மூலையில் அமர்ந்திருந்தான் இளங்கோ. அவனுக்கு வயது முப்பத்திரண்டு. கைகளில் எப்போதும் ஒரு குறிப்பேடும் பேனாவும் இருக்கும். அவன் ஒரு முழுநேர எழுத்தாளன் ஆக வேண்டும் என்ற கனவோடு, கடந்த ஐந்து வருடங்களாகப் போராடி வருகிறான். ஆனால், இதுவரை அவனுடைய எந்த ஒரு கதையும் பெரிய அளவில் அங்கீகரிக்கப்படவில்லை. அவனது பெற்றோர் அவனுக்கு ஒரு நிரந்தரமான அரசு வேலையோ அல்லது மென்பொருள் நிறுவன வேலையோ கிடைக்க வேண்டும் என்று விரும்பினர். ஆனால், இளங்கோவின் மனம் முழுக்க முழுக்க கற்பனை உலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தது. அன்று அவனுக்கு ஒரு முக்கியமான நாள். 'கம்பன் அலைகள்' மாத இதழின் சிறுகதைப் போட்டிக்கான கடைசி நாள் அதுதான். அன்று மாலைக்குள் அவன் ஒரு சிறந்த கதையை எழுதி அனுப்ப வேண்டும்.

அவனது கணினியில் பாதி எழுதப்பட்ட ஒரு கதை இருந்தது. ஆனால், அதில் அவனுக்குத் திருப்தி இல்லை. ஏதோ ஒரு உயிர் அந்த வரியில் விடுபட்டது போல அவனுக்குத் தோன்றியது. காபியை ஒரு சிப் குடித்தபடியே, ஜன்னல் வழியே வெளியே வேடிக்கை பார்த்தான். அங்கே சாலையில் மக்கள் அனைவரும் இயந்திரத்தனமாக எதையோ தேடி ஓடிக்கொண்டிருந்தனர். அப்போதுதான் அந்த முதியவரை அவன் கவனித்தான்.

சிறுகதைகள்

சாலையோரம் நிழல் தரும் ஒரு மரத்தடியில் அமர்ந்து பழைய கடிகாரங்களை பழுது பார்த்துக் கொண்டிருந்தார் அவர். அவரது கைகள் முதுமையால் லேசாக நடுங்கினாலும், அந்தச் சிறிய கடிகார முட்களையும் பற்களையும் அவர் கையாண்ட விதம் ஒரு சிறந்த கலைஞனின் நடனத்தைப் போல நுணுக்கமாக இருந்தது. சுற்றியுள்ள எந்த சத்தமும் அவரைப் பாதிப்பதாகத் தெரியவில்லை. இளங்கோவிற்குள் ஏதோ ஒரு பொறி தட்டியது. காலம், பாரம்பரியம், நவீனத்துவம் ஆகிய அனைத்தும் அவனது மனதில் ஒன்றாக இணைந்தன. உடனே தனது குறிப்பேட்டைத் திறந்து புதியதொரு கதையை எழுதத் தொடங்கினான். அவனது பேனா காகிதத்தில் மின்னல் வேகத்தில் நகர்ந்தது.

கதையின் நாயகன் சுந்தரம் ஐயா. அவர் ஒரு கிராமத்து தச்சன். மர வேலைகளில் அவருக்கு நிகர் அவரே. அவர் செய்யும் மரப் பொம்மைகளும் நாற்காலிகளும் பார்ப்பதற்கு உயிரோட்டம் உள்ளவை போல இருக்கும். சுந்தரம் ஐயாவிற்கு ஒரு பேரன் இருந்தான், அவன் பெயர் முகிலன்.

முகிலனுக்கு நவீனக் கருவிகள், மொபைல் போன்கள் மற்றும் கணினிகள் மீதுதான் ஆர்வம் அதிகம். அவன் தாத்தாவின் பாரம்பரிய மர வேலைகளைப் பழமையானது என்றும், காலத்திற்கு ஒவ்வாதது என்றும் எப்போதும் அலட்சியமாக நினைத்தான். “தாத்தா, இதெல்லாம் இந்த காலத்துக்கு செட் ஆகாது. இப்போ எல்லாம் த்ரீடி பிரிண்டிங் வந்துருச்சு” என்று அடிக்கடி கூறுவான்.

ஒரு நாள், அந்த ஊர் பெரிய தொழிலதிபர் ஒருவர் சுந்தரம் ஐயாவிடம் வந்து, தன் மகளின் திருமணத்திற்காக ஒரு பிரம்மாண்டமான மரப் பெட்டியைச் செய்து தருமாறு கேட்டார். அதில் பாரம்பரியக் கலைநயமும் இருக்க வேண்டும், அதே சமயம் நவீனப் பாதுகாப்பும் இருக்க வேண்டும் என்று ஒரு கடினமான நிபந்தனை விதித்தார். சுந்தரம் ஐயா சவாலை ஏற்றுக்கொண்டார்.

சிறுகதைகள்

அவர் ஒரு மாத காலம் இரவு பகலாக உழைத்து, தேக்கு மரத்தில் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு பெட்டியைச் செய்தார். ஆனால், பெட்டியின் பூட்டுப் பகுதியை மிக நுட்பமாகவும் திருட முடியாதபடியும் வடிவமைக்க அவருக்கு ஒரு புதிய யோசனை தேவைப்பட்டது. இதற்காக அவர் மிகவும் தீணறினார்.

இங்குதான் முகிலன் உள்ளே வருகிறான். தன் தாத்தாவின் தவிப்பைக் கண்ட அவனது உள்ளம் உருகியது. அவன் தன் கணினித் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி, தாத்தாவின் மரப் பெட்டிக்கு ஒரு ரகசிய பயோமெட்ரிக் மற்றும் டிஜிட்டல் பூட்டு முறையை வடிவமைக்க உதவினான். அந்தப் பூட்டு மரத்தின் அமைப்பிலேயே மறைந்திருக்கும் படிச் செய்தான்.

தாத்தாவின் உன்னதமான கைவண்ணமும், பேரனின் நவீனத் தொழில்நுட்பமும் இணைந்து ஒரு அற்புதமான கலைப்படைப்பு உருவானது. அந்தப் பெட்டியைக் கண்ட தொழிலதிபரும் ஊர் மக்களும் வியப்பின் எல்லைக்கே சென்றனர். முகிலன் அன்று ஒரு உண்மையை உணர்ந்துகொண்டான், பழமையும் புதுமையும் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதற்காக அல்ல, இரண்டும் இணைந்து புதிய சிகரங்களைத் தொடுவதற்கே என்று.

இளங்கோ இந்தக் கதையை மிகவும் உணர்வுப்பூர்வமாக எழுதி முடித்தான். வரிகள் ஒவ்வொன்றும் அவனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிவந்தவை. அவன் கதையை மீண்டும் ஒருமுறை வாசித்துப் பார்த்தான். அவனுக்குள் ஒரு பெரிய ஆத்ம திருப்தி ஏற்பட்டது. உடனே அதைத் தன் மடிக்கணினியில் தட்டச்சு செய்து, மின்னஞ்சல் மூலம் 'கம்பன் அலைகள்' இதழுக்கு அனுப்பி வைத்தான். கதையை அனுப்பிய பிறகு அவனது மனம் லேசானது போல இருந்தது.

சிறுகதைகள்

நாட்கள் நகர்ந்தன. நவம்பர் மாதம் பத்தொன்பதாம் தேதி வந்தது. அன்றுதான் கம்பன் அலைகள் இதழ் வெளியாகும் நாள். இளங்கோவின் இதயம் வேகமாகத் துடித்தது. அவன் அவசர அவசரமாகக் கம்பன் இணையதளத்திற்குச் சென்று முடிவுகளைப் பார்த்தான். அங்கே சிறந்த சிறுகதைகளுக்கான பட்டியலில் அவனது பெயர் முதலாவதாக மின்னியது! 'தாத்தாவும் பேரனும் – ஒரு காலப் பாலம்' என்ற அவனது கதைக்கு 'கம்பன் மகுடம்' விருது அறிவிக்கப்பட்டிருந்தது. அவனது கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளித்தது. அவனது ஐந்து வருட விடாமுயற்சிக்கும் தியாகத்திற்கும் கிடைத்த மாபெரும் அங்கீகாரம் அது.

இளங்கோ உடனே தன் பெற்றோரைக் கூப்பிட்டு விஷயத்தைக் கூறினான். எப்போதும் அவனது எழுத்தை வெறும் பொழுதுபோக்கு என்று நினைத்த அவனது தந்தை, அன்று பெருமையோடு அவனது தோளைத் தட்டினார். "உன் கனவு மெய்ப்பட்டுவிட்டது மகனே, நீ நினைத்ததை சாதித்துவிட்டாய்" என்றார்.

அன்று முதல் இளங்கோவின் பேனா இன்னும் வீரியத்துடன் எழுதத் தொடங்கியது. அவனது கதைகள் பலருடைய மனதைத் தொட்டன. கலை என்பது வெறும் பொழுதுபோக்கு அல்ல, அது மனித மனங்களையும் தலைமுறைகளையும் இணைக்கும் ஒரு உன்னதப் பாலம் என்பதை அவன் உலகிற்கு உணர்த்தினான்.

அவனது இந்த வெற்றிக்குக் காரணம், அன்றைய தினம் அவன் கண்ட அந்த முதிய கடிகாரக் கலைஞரும், அவனுள் இருந்த மாறாத நம்பிக்கையும்தான். காலம் மாறும், மனிதர்கள் மாறுவார்கள், ஆனால் உண்மையான கலைக்கும் உழைப்பிற்கும் என்றும் அழிவில்லை என்பதை இளங்கோவின் வாழ்க்கை நிரூபித்தது. அவன் தொடர்ந்து எழுதினான், தமிழ் இலக்கிய உலகில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தான்.

– கோ கே. ஏழுமலை

சிறுகதைகள்

சிறுகதை-2

கடைசி சாட்சி

அன்று இரவு பெய்த மழை, சென்னையின் சாலைகளை மட்டும் நனைக்கவில்லை.

பல ஆண்டுகளாக மண்ணுக்குள் புதைந்து கிடந்த ஒரு உண்மையையும் வெளியே கொண்டுவரப் போகிறது என்பதை அந்த நகரம் அறிந்திருக்கவில்லை.

இரவு மணி 11.40.

புறநகரின் அமைதியான பகுதியில் இருந்த பழைய பங்களா ஒன்றிலிருந்து காவல் நிலையத்திற்கு அவசர அழைப்பு வந்தது.

“சார்... வீட்டுக்குள்ள ஒருத்தர் இறந்து கிடக்கிறார். கதவு உள்ளே இருந்து பூட்டியிருக்கு. வீட்டுக்குள்ள வேற யாரும் இல்லை.”

சில நிமிடங்களில் காவல்துறை அங்கு வந்தது.

பங்களாவின் உரிமையாளர் ராமநாதன்.

வயது அறுபத்து இரண்டு. ஓய்வு பெற்ற அரசு அதிகாரி.

மனைவி இறந்து சில ஆண்டுகள் ஆகிவிட்டதால், அந்தப் பெரிய வீட்டில் தனியாகவே வாழ்ந்து வந்தார்.

அவரது படுக்கையறையில், கட்டிலுக்கு அருகில் ராமநாதன் உயிரற்ற நிலையில் கிடந்தார்.

அறையின் கதவு உள்ளே இருந்து பூட்டப்பட்டிருந்தது.

ஜன்னல்கள் மூடப்பட்டிருந்தன.

பின்பக்கக் கதவும் உள்ளே இருந்து தாழிடப்பட்டிருந்தது.

எந்தவிதமான போராட்டத்தின் தடயமும் இல்லை.

சிறுகதைகள்

மேசையின் மீது பாதி குடிக்கப்பட்டிருந்த ஒரு குவளை.

அருகில் ஒரு மருந்துப் பாட்டில்.

சுவரில் இருந்த பழைய கடிகாரம் மட்டும் –

11.17 மணியில் நின்றிருந்தது.

"தற்கொலை போலத்தான் இருக்கிறது," என்றார் காவல் ஆய்வாளர்.

"உறுதியா?"

"கதவு உள்ளே இருந்து பூட்டியிருந்தது."

சுகந்தன் மெதுவாகச் சிரித்தான்.

"கதவு உள்ளே இருந்து பூட்டியிருக்கிறது என்பதால்,

கொலைகாரன் உள்ளே இருந்தான் என்று அர்த்தமில்லை."

அறையில் இருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

"முதலில் ராமநாதனின் கைப்பேசியைக் கண்டுபிடியுங்கள்," என்றான் சுகந்தன்.

தேடினர்.

கிடைக்கவில்லை.

"அவருடைய கணினி?"

"இருக்கிறது."

சுகந்தன் கணினியைத் திறந்தான்.

கடைசியாக திறக்கப்பட்டிருந்த கோப்பு:

"2004 – உண்மை"

அவன் அந்தப் பெயரைப் பார்த்ததும் நின்றுவிட்டான்.

"2004-ல் என்ன நடந்தது?"

அருகில் இருந்த ராமநாதனின் உறவினர் ஒருவர் பதிலளித்தார்.

"அவர் வேலை பார்த்த அலுவலகத்தில் அப்போது ஒரு பெரிய நிதி முறைகேடு

நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அதைப் பற்றி அவர் எப்போதும் பேசமாட்டார்."

சிறுகதைகள்

சுகந்தன் மெதுவாகக் கேட்டான்:

"பேசமாட்டாரா... அல்லது பேசக்கூடாத நிலைமையா?"

அதற்கு யாரிடமும் பதில் இல்லை.

அடுத்த நாள் சுகந்தன் பழைய பதிவுகளைத் தேடத் தொடங்கினான்.

2004-ஆம் ஆண்டு நடந்த சம்பவம் பற்றிய ஒரு பழைய செய்தித்தாள் துண்டு அவனுக்குக் கிடைத்தது.

"அரசு நிதி முறைகேடு – இளம் கணக்காளர் மர்ம மரணம்."

இறந்தவர்:

சரவணன்.

வயது இருபத்தெட்டு.

செய்தியில் அவர் தற்கொலை செய்துகொண்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் ஒரு வரி மட்டும் சுகந்தனின் கவனத்தை ஈர்த்தது.

"மரணத்திற்கு முன் சரவணன் சில முக்கிய ஆவணங்கள் தன்னிடம் இருப்பதாக நண்பரிடம் தெரிவித்திருந்தார்."

"அந்த ஆவணங்கள் எங்கே?" என்று சுகந்தன் தனக்குள் கேட்டுக்கொண்டான்.

அவன் ராமநாதனின் பழைய நண்பரைச் சந்தித்தான்.

"கடந்த சில நாட்களாக ராமநாதன் எப்படி இருந்தார்?"

"மிகவும் பயந்திருந்தார்."

"யாராவது அவரை மிரட்டினார்களா?"

அந்த நண்பர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார்.

பிறகு மெதுவாகச் சொன்னார்:

"ஒரு நாள் அவர் என்னிடம் சொன்னார்..."

"என்ன?"

"'நான் செய்த தவறுக்கு தண்டனை எனக்குத்தான் கிடைக்க வேண்டும்.

சிறுகதைகள்

ஆனால் நான் மறைத்த உண்மைக்காக வேறொருவன் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிறான்.’’’

சுகந்தனின் முகம் மாறியது.

“அவர் யார்?”

“சொல்லவில்லை.”

அன்று இரவு சுகந்தன் மீண்டும் பங்களாவுக்குச் சென்றான்.

அவன் நேராக சுவரில் இருந்த கடிகாரத்தின் முன் நின்றான்.

11.17.

கடிகாரத்தை மெதுவாகக் கழற்றினான்.

அதன் பின்புறத்தில் ஒரு சிறிய காகிதம் ஒட்டப்பட்டிருந்தது.

அதில் ஒரே ஒரு வரி:

“உண்மை நேரத்தைத் தேடாது. மனிதனைத் தேடும்.”

கீழே – “சரவணன்.”

சுகந்தனுக்கு உடல் முழுவதும் ஒரு மின்னல் ஓடியது.

11.17 என்பது மரண நேரம் அல்ல.

அது ஒரு குறியீடு.

அவன் உடனே கணினிக்குச் சென்றான்.

“2004 – உண்மை” என்ற கோப்பின் கடவுச்சொல்லாக 1117 என்று தட்டச்சு செய்தான்.

கோப்பு திறந்தது.

அதில் பல வருடங்களுக்கு முன்பு நடந்த நீதி முறைகேட்டின் விவரங்கள் இருந்தன.

பல பெயர்கள். பல கணக்கு எண்கள். பல பரிமாற்றங்கள்.

அவற்றின் நடுவில் ஒரு முக்கியமான வரி:

“சரவணன் குற்றவாளி அல்ல.”

சிறுகதைகள்

அதற்கு கீழே:

“அவரை காப்பாற்ற முடிந்தது. ஆனால் நான் அமைதியாக இருந்தேன்.”

சுகந்தன் நாற்காலியில் இருந்து எழுந்தான்.

அப்போது அறையின் விளக்கு அணைந்தது.

சில விநாடிகள் இருள்.

பிறகு பின்புறக் கதவு மெதுவாக மூடப்படும் சத்தம்.

சுகந்தன் உடனே திரும்பிப் பார்த்தான்.

யாரும் இல்லை.

ஆனால் தரையில் ஒரு கைப்பேசி கிடந்தது.

அது – ராமநாதனுடையது.

அவன் கைப்பேசியை எடுத்தான்.

அதில் ஒரு குரல் பதிவு மட்டும் இருந்தது.

அதை இயக்கினான்.

ராமநாதனின் குரல் கேட்டது.

“இந்தச் செய்தியை நீ கேட்கிறாய் என்றால்... நான் உயிரோடு இருக்க மாட்டேன்.”

சில விநாடிகள் அமைதி.

“சரவணனை கொன்றது நான் அல்ல...”

குரல் நடுங்கியது.

“ஆனால் அந்தக் கொலையைத் தடுக்க என்னால் முடிந்தும்... நான் அமைதியாக இருந்தேன்.”

மீண்டும் அமைதி.

பிறகு:

“அந்த இரவில் என்ன நடந்தது என்பதை நான் பார்த்த ஒரே சாட்சி...”

அவர் ஒரு பெயரைச் சொல்ல முயன்றார்.

சிறுகதைகள்

ஆனால் பதிவு திடீரென துண்டிக்கப்பட்டது

சுகந்தன் அந்தக் குரல் பதிவை மீண்டும் மீண்டும் கேட்டான்.

“நான் பார்த்த ஒரே சாட்சி...”

யாரை அவர் சொல்ல வந்தார்?

அடுத்த நாள் சுகந்தன் 2004-ஆம் ஆண்டு வழக்கை விசாரித்த காவல் அதிகாரியைத் தேடினான்.

அவரது பெயர் –

வரதராஜன்.

ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர்.

சுகந்தன் அவரைச் சந்தித்தான்.

“2004-ல் சரவணன் இறந்த வழக்கு நினைவிருக்கிறதா?”

வரதராஜன் அமைதியாக இருந்தார்.

“அது தற்கொலை,” என்றார்.

“அப்படியா?”

சுகந்தன் ஒரு பழைய கோப்பை மேசையில் வைத்தான்.

“அப்படியானால் இந்தக் கடிதம் என்ன?”

வரதராஜனின் முகம் மாறியது.

“இது... உங்களிடம் எப்படி வந்தது?”

“அதைப் பற்றி நான் கேட்கவில்லை. இந்தக் கடிதம் ஏன் வழக்குப் பதிவில் இல்லை?”

வரதராஜன் பதில் சொல்லவில்லை.

சில நொடிகளுக்குப் பிறகு மெதுவாகப் பேசத் தொடங்கினார்.

“சரவணன் இறப்பதற்கு முன் உண்மையைச் சொல்ல முயன்றான்.”

“என்ன உண்மை?”

“அந்த நீதி முறைகேட்டில் அவன் சம்பந்தப்பட்டவன் அல்ல.”

சிறுகதைகள்

“அதை நீங்கள் தெரிந்திருந்தும் தற்கொலை என்று பதிவு செய்தீர்களா?”

வரதராஜன் கண்களை மூடிக்கொண்டார்.

“எனக்கு மேலிருந்து அழுத்தம் வந்தது.”

“யாரிடமிருந்து?”

அவர் பதில் சொல்லவில்லை.

அந்த நேரத்தில் சுகந்தனின் கைப்பேசியில் ஒரு செய்தி வந்தது.

“உண்மையைத் தேடாதே. சில உண்மைகள் புதைக்கப்பட்டிருக்க வேண்டும்.”

சுகந்தன் உடனே எண்ணைச் சோதித்தான்.

அது –

ராமநாதனின் கைப்பேசி எண்.

அவன் அதிர்ந்தான்.

ராமநாதனின் கைப்பேசி அவனிடம் இருந்தது.

அப்படியென்றால் அந்தச் செய்தியை அனுப்பியது யார்?

சுகந்தன் உடனே பங்களாவுக்குத் திரும்பினான்.

அவன் அறையை முழுவதுமாக மீண்டும் சோதித்தான்.

இந்த முறை அவன் பார்வை சுவரில் இருந்த கடிகாரத்தைத் தாண்டி,

மேசையின் கீழே சென்றது.

அங்கே ஒரு சிறிய உலோகக் கம்பி கிடந்தது.

அதைப் பார்த்தவுடன் அவனுக்கு கதவின் மர்மம் புரிந்தது.

கதவை வெளியே இருந்து இழுத்துப் பூட்ட முடியும்.

அதாவது –

கொலைகாரன் அறைக்குள் இருந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

அவன் கொலை செய்துவிட்டு,

அந்த உலோகக் கம்பியைப் பயன்படுத்தி கதவை வெளியே இருந்து பூட்டிவிட்டு

சென்றிருக்கலாம்.

சிறுகதைகள்

ஆனால் கொலைகாரன் யார்?

அப்போது சுகந்தனுக்கு இன்னொரு விஷயம் நினைவுக்கு வந்தது.

ராமநாதன் இறப்பதற்கு முன்பு சொன்னார்:

“நான் பார்த்த ஒரே சாட்சி...”

அது ஒரு மனிதரைப் பற்றிய வார்த்தை அல்ல.

ஒரு காட்சியைப் பற்றிய வார்த்தையாக இருக்கலாம்.

அவன் உடனே ராமநாதனின் கணினியில் இருந்த புகைப்படங்களைத் தேடினான்.

ஒரு பழைய புகைப்படம் கிடைத்தது.

2004-ஆம் ஆண்டு அலுவலகத்தில் எடுத்த புகைப்படம்.

அதில் ராமநாதன்.

சரவணன்.

வரதராஜன்.

மேலும் சிலர்.

சுகந்தன் அந்தப் புகைப்படத்தை பெரிதாக்கிப் பார்த்தான்.

பின்னால் இருந்த கண்ணாடியில் ஒரு உருவம் பிரதிபலித்திருந்தது.

அந்த உருவத்தின் முகம் தெளிவாகத் தெரியவில்லை.

ஆனால் சட்டையின் கையில் இருந்த அடையாள அட்டை தெளிவாக இருந்தது.

அந்த அடையாள அட்டையில் –

“வரதராஜன் – காவல் ஆய்வாளர்”

என்று இருந்தது.

சுகந்தன் மெதுவாகச் சிரித்தான்.

“ராமநாதன்... நீ மனிதனை மறைக்கவில்லை. அவன் விட்டுச் சென்ற தடயத்தை மறைத்திருக்கிறாய்.”

அவன் உடனே வரதராஜனை மீண்டும் சந்தித்தான்.

சிறுகதைகள்

“நீங்கள் ராமநாதனை கொன்றீர்களா?”

வரதராஜன் அமைதியாக இருந்தார்.

“பதில் சொல்லுங்கள்.”

“இல்லை.”

“அப்படியானால் இந்தக் குரல் பதிவை கேளுங்கள்.”

சுகந்தன் கைப்பேசியை இயக்கினான்.

ராமநாதனின் குரல்:

“வரதராஜன்... இனி நான் அமைதியாக இருக்க மாட்டேன்.

நாளை காலை எல்லா ஆவணங்களையும் காவல்துறையிடம் கொடுக்கப் போகிறேன்.”

அதற்குப் பிறகு வரதராஜனின் குரல்:

“அதை நீ செய்ய மாட்டாய், ராமநாதா.”

பின்னர் ஒரு பெரிய சத்தம்.

குரல் பதிவு முடிந்தது.

வரதராஜனின் முகத்தில் இருந்த அமைதி உடைந்தது.

“அந்தப் பதிவு... எப்படி?”

“நீங்கள் அழித்துவிட்டதாக நினைத்தீர்கள்.”

சுகந்தன் மெதுவாகச் சொன்னான்.

“ஆனால் ராமநாதன் அதை வேறு இடத்தில் சேமித்திருந்தார்.”

அறையில் நீண்ட அமைதி.

இறுதியில் வரதராஜன் தலையைத் தாழ்த்தினார்.

“நான் ராமநாதனை கொன்றேன்.”

2004-ஆம் ஆண்டு நடந்த ஊழலில் பலர் சம்பந்தப்பட்டிருந்தனர்.

சரவணன் உண்மையை வெளிப்படுத்த முயன்றான்.

சிறுகதைகள்

அவனிடம் இருந்த ஆவணங்களைப் பெறுவதற்காக
அவனைச் சந்தித்தவர்கள் ஏற்படுத்திய மோதலில் அவன் உயிரிழந்தான்.
அது தற்கொலை என்று பதிவு செய்யப்பட்டது.
வரதராஜன் உண்மையை அறிந்திருந்தார்.
ராமநாதனும் அறிந்திருந்தார்.
ஆனால் இருவரும் மௌனமாக இருந்தனர்.
ஆண்டுகள் கழித்து ராமநாதனின் மனசாட்சி அவனைத் துரத்தியது.
உண்மையை வெளியிட முடிவு செய்தான்.
அதற்காகவே பழைய ஆவணங்களைத் திரட்டினான்.
அதை அறிந்த வரதராஜன் –
அவனை கொன்றுவிட்டார்.
11.17-க்கு ராமநாதன் இறக்கவில்லை.
11.17-க்கு அவன் வரதராஜனைப் பார்த்தான்.
அதனால்தான் அந்த நேரம் கடிகாரத்தில் நிறுத்தப்பட்டது.
அது மரண நேரமல்ல.
கடைசி சாட்சியின் நேரம்.
காவல்துறையினர் வரதராஜனை கைது செய்தனர்.
2004-ஆம் ஆண்டு மூடப்பட்ட சரவணனின் வழக்கும் மீண்டும்
திறக்கப்பட்டது.
பல ஆண்டுகளாக "தற்கொலை" என்று சொல்லப்பட்ட
ஒரு மரணத்தின் பின்னால் இருந்த உண்மை வெளிச்சத்துக்கு வந்தது.
சரவணனின் குடும்பத்துக்கு நீதி தாமதமாக வந்தாலும், வந்தது.
சுகந்தன் அந்தப் பங்களாவைவிட்டு வெளியே வந்தான்.
மழை நின்றிருந்தது.

சிறுகதைகள்

அவன் ஒருமுறை திரும்பிப் பார்த்தான்.

சுவரில் இருந்த அந்தப் பழைய கடிகாரம் இப்போது இயங்கிக் கொண்டிருந்தது.

11.18.

இருபத்திரண்டு ஆண்டுகளாக நின்றிருந்த உண்மை,

ஒரு நிமிடம் முன்னேறியிருந்தது.

சுகந்தன் மெதுவாகச் சிரித்தான்.

அவன் மனதில் ஒரு வரி மட்டும் ஒலித்தது:

“காலம் எதையும் மறக்காது...

உண்மையை மட்டும் சிறிது நேரம் காத்திருக்கும்.”

–மாணிக்கவாசகம் நாகேசுவரன்



www.kamban.in